சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **96 / 2013**

பெயர்: சாரதாம்பாள் பி.வா.சா.2 தேதி **09.03.2026**

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. எனக்கு தனியாக தொழில் எதுவும் உண்டா என்றால் பால் வியாபாரம் செய்துவருகிறேன். நான் தனியாக மாடு வைத்து பால் வியாபாரம் செய்துவருகிறேன். என்னிடம் முன்னர் 4 ,5 மாடுகள் இருந்தது, தற்பொழுது 2 மாடுகள் உள்ளது. மேற்படி இரண்டு மாடுகளும் கறவை மாடுகள் தான். காலையில் 4-5 லிட்டரும், மாலையில் 3 லிட்டரும் பால் கறக்கும். மேற்படி பணத்தை கொண்டு தான் மாடுகளை பராமரித்து வருகிறேன். மேற்படி மாடுகளை பராமரித்து போக மாதமொன்றுக்கு ரூ.5000/- வரை லாபம் கிடைக்கும். நான் பாலினை அரசாங்க சொசைட்டிக்கு தான் கொடுக்கிறேன். மேற்படி சங்கதிக்காக கணக்கு புத்தகம் உள்ளது அதனை தாக்கல் செய்யவில்லை. மேற்படி புத்தகத்தை பார்த்தால் மாதமொன்றுக்கு எவ்வளவு பணம் கிடைக்கும் என்கின்ற சங்கதி தெரியவரும். இவ்வாறு எத்தனை ஆண்டுகளாக சொசைட்டிக்கு பால் ஊற்றுகிறோம் என்றால் சுமார் 10 ஆண்டுகளாக பால் ஊற்றிவருகிறேன். என்னுடன் பிறந்தவர்கள் 7 நபர்கள். மேற்படியார்கள் 7 பேரும் பெண்கள் தான். மேற்படி 7 பேருக்கும் எனது தகப்பனார் திருமணம் செய்துவைத்தாரா என்றால் 5 பேருக்கு எனது தகப்பனாரும், 2 பேருக்கு எனது தாயாரும் திருமணம் செய்துவைத்தார்கள்.

2. எனது தகப்பனார் என்ன வியாபாரம் செய்துவந்தார் என்றால் பாக்கு வியாபாரம் செய்துவந்தார். கரூரில் இருந்து திருச்சி வரைக்கும், சின்னதாராபுரம், கரூர் பள்ளப்பட்டி வரைக்கும் வியாபாரம் செய்துவந்தார். எனது தாயார் இல்லத்தரசி தான். எனது தகப்பனாருக்கு மேற்படி பாக்கு வியாபாரம் செய்து எவ்வளவு பணம் வந்தது என்று தெரியுமா என்றால் நிறைய பணம் வந்தது. எனது தகப்பனார் பணம் கொடுத்தற்கு ஆவணங்கள் உண்டா என்றால் எதுவும் இல்லை. எனது மகனுக்கு தற்பொழுது 43 வயதாகிறது. எனது மகன் கம்யூட்டர் சையன்ஸ் படித்துள்ளார் ஆனால் வெல்டிங் பட்டறையில் வேலை செய்து வருகிறார். எனது மகன் சம்பளத்திற்காக வேலை செய்துவருகிறார். வெல்டிங் பட்டறை எங்கு உள்ளது என்றால் திருமுக்கூடலூரில் உள்ளது. எனது மகன் ஆரம்ப காலகட்டத்தில் ரூ.15,000/-மும், தற்பொழுது ரூ.30,000/-மும் பெற்றுவருகிறார். மேற்படி எனது மகன் 17வயதில் வேலைக்கு சென்றார், எப்பொழுது படிப்பு முடித்தார் என்றால் 24 வயதில் படிப்பை முடித்தார். நான் வசதியான குடும்பத்தை சேர்ந்த நிலையில் எனது மகன் ஏன் 17 வயதில் வேலைக்கு சென்றார் என்றால் அவருக்கு படிப்பு நன்றாக வரவில்லை என்பதால் வேலைக்கு அனுப்பினோம்.

3. எனது அப்பா, அம்மா கொடுத்த சிறுவாட்டு பணத்தை கொண்டும், நான் பால் வியாபாரம் செய்து கிடைத்த வருமானத்தை கொண்டும் தாவா 16அயிட்ட சொத்தை கிரையம் பெற்றதாக கூறுவது உண்மையில்லை என்றால் சரியல்ல. எனது மகனின் பெயரில் உள்ள சொத்தானது அவர் சுயமாக சம்பாதித்து கிரையம் பெற்றதாக கூறுவது உண்மையில்லை என்றால் சரியல்ல. மேற்படி சொத்துக்கள் அனைத்தும் எனது மாமனாருக்கு பாத்தியப்பட்ட பூர்விக சொத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற வருமானத்தை கொண்டு கிரையம் பெறப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தில் வாதிகளுக்கு பாகம் உண்டு என்றாலும், அதனை மறுப்பதற்காக பொய் கட்சி செய்துவருகிறேன் என்றால் சரியல்ல. எனது மகன் வேலைக்கு சென்றதற்கான சம்பள பட்டியல் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதி கோரிய பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.03.09 15:19:59 +0530

சார்பு நீதிபதி

குளித்தலை.